# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 51 | 4 Pages | 21.09.2023 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 51 | 4 பக்கங்கள் | 21.09.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## நீட் தேர்வில் முட்டை மார்க் எடுத்தாலும், முதுகலை மருத்துவ படிப்பில் சேரலாம் மத்திய அரசு

டெல்லி, செப். 21

3வது சுற்று கலந்தாய்வில் பங்கேற்கும் மாணவர்களுக்கும் சலுகை அறிவிப்பு. நீட் முதுகலை படிப்புகளுக்கான தகுதி சதவீதம் பூஜ்ஜியமாக குறைக்கப்பட்டு இருக்கிறது.

மருத்துவ படிப்புகளில் சேர்வதற்கான தகுதித் தேர்வை தேசிய தேர்வு முகமை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது. நாடு முழுக்க பிளஸ்2 முடித்த மாணவமாணவிகள் நீட் தேர்வு எழுதி அதன் மூலம் அரசு மருத்துவ கல்லூரிகளில் சேர்ந்து பயின்று வருகின்றனர். இந்த நிலையில், நீட் முதுநிலை தகுதி மதிப்பெண் பூஜ்ஜியமாக குறைக்கப்பட்டு இருக்கிறது. இது குறித்து மத்திய அரசின் மருத்துவ கலந்தாய்வு குழு வெளியிட்டு இருக்கும் அறிக்கையில், "நீட் தேர்வில் பூஜ்ஜியம் மதிப்பெண் எடுத்து இருந்தாலும், முதிநிலை மருத்துவ படிப்பில் சேர முடியும்," என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. "நீட் முதுகலை படிப்புகளுக்கான தகுதி சதவீதம் பூஜ்ஜியமாக குறைக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இவர்கள் தங்களின் விருப்பங்களை திருத்த அனுமதி வழங்கப்படும்." மேலும், "முதுநிலை கலந்தாய்வுக்கான 3வது சுற்றுக்கான புதிய அட்டவணை விரைவில் மருத்துவ கலந்தாய்வு குழு வலைதளத்தில் வெளியிடப்படும்," என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

## மகளிர் இடஒதுக்கீடு மசோதா மக்களவையில் நிறைவேறியது



டெல்லி, செப். 21

33% இடஒதுக்கீடு மசோதா முழுமை பெறவில்லை என்று ராகுல் காந்தி கருத்து. நாட்டின் பெண்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மசோதா ஆகும்.

பாராளுமன்றம், சட்டமன்றங்களில் மகளிருக்கு 33% இடஒதுக்கீடு வழங்கும் மசோதா மக்களவையில் நிறைவேறியது. இந்த மசோதா மீதான வாக்கெடுப்பில் 454 வாக்குகள் ஆதரவாகவும், 2 வாக்குகள் எதிராகவும் பதிவாகி உள்ளன. பாராளுமன்ற சிறப்பு கூட்டம் கடந்த திங்கள் கிழமை (செப்டம்பர் 18) துவங்கி வெள்ளி கிழமை (செப்டம்பர் 22) வரை என மொத்தம் ஐந்து நாட்கள் நடைபெற இருக்கிறது. சிறப்பு கூட்டத்தின் இரண்டாவது நாளான நேற்று மகளிர் இடஒதுக்கீடு மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதா மீதான விவாதம் நேற்றும், இன்றும் நடைபெற்று வந்தது. இன்று முழுக்க இந்த மசோதா மீதான விவாதம் நடைபெற்ற நிலையில், தற்போது மசோதா நிறைவேறியதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

## பல மைனர் சிறுமிகள் மீது பாலியல் தாக்குதல்: மதகுருவை தேடும் பிலிப்பைன்ஸ் காவல்துறை

பிலிப்பைன்ஸ், செப். 21

தென்கிழக்காசிய நாடான பிலிப்பைன்ஸில் உள்ளது மிண்டனாவ் நகரம். இந்நகரத்தில் தற்போது ஒமேகா டி சலோனேரா (Omega de Salonera) என்றும் முன்னர் சொக்கோரோ பயனிஹான் சேவைக்குழு (Soccoro Bayani han Services) என்றும் அழைக்கப்பட்ட ஒரு மத அமைப்பு செயல்படுகிறது. தன்னை பின்பற்றுபவர்களை தவிர வேறு எவராலும் எளிதில் உள்ளே நுழைய முடியாதவாறு ஆயுதமேந்திய காவலர்கள் சூழ, அதன் தலைவர் ஜே ரென்ஸ் பி க்விலேரியோ (Jey Rence B Quilario) என்பவரால் ஒரு மலைப்பகுதியில் இது செயல்படுகிறது. 2019ல் அந்த பிராந்தியத்தில் ஏற்பட்ட தொடர் நிலநடுக்கத்திற்கு பிறகு அச்சத்தில் வாழ்ந்து வந்த மக்களிடம், உலகம் அழிய போவதாகவும் அதிலிருந்து தப்ப தன்னிடம் சரணடையுமாறும் கூறி மூளை சலவை செய்துள்ளார். ஏசுநாதரின் மறுஅவதாரமாக தன்னை அறிவித்து கொண்டுள்ள க்விலேரியோ மீது அவரது ஆதரவாளர்கள் முழு நம்பிக்கை வைத்துள்ளனர். உறுப்பினர்களிடம் பெருகின்ற நிதியிலிருந்தும், போதை மருந்து கடத்தல் மூலமாகவும் நிதி பெறும் இந்த அமைப்பில் சுமார் 1600 குழந்தைகள் உட்பட 3,500 பேருக்கும் மேல் நம்பிக்கையாளர்களாக உள்ளனர். சில தினங்களுக்கு முன்னால் 8 குழந்தைகள் அங்கிருந்து தப்பித்து வந்தனர். அங்கு நடைபெறும் கொடுமைகள் குறித்து அவர்கள் காவல்துறையிடம் வாக்குமூலம் தெரிவித்துள்ளனர். க்விலேரியோ, மைனர் சிறுமிகள் மீது பாலியல் தாக்குதல் நடத்துவதாகவும், அங்குள்ள ஆண்களுக்கு அச்சிறுமிகளை கட்டாய திருமணம் செய்து வைப்பதாகவும், அதற்கு அச்சிறுமிகளின் பெற்றோர்களும் ஒப்பு கொள்வதாகவும், அந்த மலைப்பகுதியில் வசிக்கும் பிற சிறுமிகள் மீதும் அவர் பாலியல் தாக்குதல்களில் ஈடுபடுவதாகவும் புகாரளித்தனர். தற்போது இவர் மீது நடவடிக்கை எடுக்க விசாரணை அமைப்புகள் தீவிரமாக இறங்கியுள்ளன.

## ஆந்திர பிரதேச மாநிலத்தின் புதிய தலைநகர் விசாகப்பட்டினம்: ஜெகன் மோகன் ரெட்டி அறிவிப்பு

ஆந்திரப்பிரதேசம், செப். 21

விஜயதசமி முதல் ஆந்திர பிரதேச மாநிலத்தின் தலைநகராக விசாகப் பட்டினம் செயல்படும் என்று அம்மாநில சட்டமன்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு உள்ளது. முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி தலைமை யில் இன்று ஆந்திர பிரதேச சட்டமன்ற கூட்டம் கூடியது. ஆந்திர பிரதேச மாநிலத்தின் மழைகால கூட்டத் தொடர் நாளை (செப்டம்பர் 21) துவங்க இருக்கும் நிலையில், இன்று கூடிய அமைச்சரவை கூட்டத்தில், புதிய தலைநகர் பற்றிய அறிவிப்பு வெளியானது. நவம்பர் 2ம் தேதி துவங்கும் விஜயதசமி நாள் முதல் முதலமைச்சர் அலுவலகம் விசாகப்பட்டினத்திற்கு மாறுகிறது. இதே போன்று மற்ற அமைச்சர்களும் விசாகப்பட்டினத்தில் இருந்து பணியாற்ற தயாராக வேண்டும். ஆந்திர பிரதேச மாநிலத்தில் இருந்து தெலுங்கானா மாநிலம் தனியே பிரிந்ததில் இருந்து, ஆந்திரா மாநில தலைநகராக அமராவதி நகரம் செயல்பட்டு வருகிறது. இம்மாநி லத்தின் மிகப் பெரிய நகரம் விசாகப்பட்டினம் என்பது குறிப்பிடத்தக்கது.

# கலைஞர் 100 நூலை முதலமைச்சர் வெளியிட்டார்

சென்னை, செப். 21

கருணாநிதிமுதல்வராகபொறுப் பேற்றது முதல் 2019 வரை வெளி யான கட்டுரை தொகுப்பு நூலாக வெளியீடு. 'கலைஞர் 100' நூலை முதலமைச்சர் வெளியிட முதல் பிரதியை கமல்ஹாசன் பெற்றுக் கொண்டார்.




கலைஞர் கருணாநிதியின் நூற் றாண்டு தமிழ் நாடு முழுக்க கோலாகலமாக கொண்டாடப் பட்டு வருகிறது. கொண்டாட்டத் தின் அங்கமாக பல்வேறு நலத்திட் டங்கள் அறிவிக்கப்பட்டும், சிறப்பு நிகழ்ச்சிகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சி யாக நடைபெற்று வருகின்றன. அதன்படி சென்னை கலைவா ணர் அரங்கில் இன்று "கலைஞர் 100" நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

இந்த விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கலந்து கொண்டு "கலைஞர் 100" புத்தகத்தை வெளியிட, அதனை நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவருமான கமல்ஹாசன் பெற்றுக் கொண டார். கலைஞர் 100 நூல் வெளி யீட்டு விழாவில் தமிழ்நாடு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப் பினர்கள், பல்வேறு கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# உடுமலை தாலுகா அலுவலகத்தில் மகளிர் உரிமைத் தொகை கிடைக்காதவர்களுக்கு உதவி மையம்

உடுமலை, செப். 21

தகுதியுடைய பெண்கள் வங்கிக் கணக்கில் ரூபாய் ஆயிரம் வரவு வைக்கப்பட்டது. மேல்முறையீடு செய்வதற்கு விருப்பம் உள்ளவர்கள் இசேவை மையத்தினை அணுகு மாறு தெரிவிக்கப்பட்டது



கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை கடந்த 15 ம் தேதி அண்ணா பிறந்த நாளன்றுதமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத் தார்.அதைத் தொடர்ந்து தகுதியு டைய பெண்கள் வங்கிக் கணக்கில் ரூபாய் ஆயிரம் வரவு வைக்கப்பட் டது. இதனால் இல்லத்தரசிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.மேலும் தகுதி இருந்தும் உரிமைத் தொகை கிடைக்கப் பெறாதவர்கள் மற்றும் நிராகரிக்கப்பட்டவர்கள் விண்ணப் பத்தின் நிலையை தெரிந்து கொள் ளும் வகையில் தாலுகா அலுவலகங் களில் சிறப்பு முகாம் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டு இருந்தது.மேலும் இதற்கென இணையதள வசதியும் ஏற்படுத்தப் பட்டது.அதன்படி நேற்று உடுமலை தாலுகா அலுவலகத்தில் முகாம் அமைக்கப்பட்டது.அப்போது உடு மலை ஆர்.டி.ஓ ஜஸ்வந்த் கண்ணன் கலந்து கொண்டு பொதுமக்களின் விண்ணப்பத்தின் நிலையை ஆய்வு செய்தார்.முன்னதாக அனைவருக் கும் டோக்கன் வழங்கப்பட்டது. அதன்படி ஒவ்வொருவரையும் வரி சையாக அழைத்து சரி பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. அப் போது மேல்முறையீடு செய்வதற்கு விருப்பம் உள்ளவர்கள் இசேவை மையத்தினை அணுகுமாறு தெரி விக்கப்பட்டது.இதற்கு அரசு சார் பில் கட்டணம் வசூலிக்கப்படாது என்பது குறிப்பிடத்தக்கது.இந்த முகமானது 30 நாட்களுக்கு நடை பெறும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அப்போது பொதுமக்கள் ஆதார் கார்டு,குடும்ப அட்டையை கொண்டு வந்து சரி பார்த்துக் கொள் ளலாம் என்று வருவாய் துறையினர் தெரிவித்தனர்.முதல் நாளான நேற்று 150 விண்ணப்பதாரர்களுக்கு தீர்வு காணப்பட்டு உள்ளது. முகாமில் உடுமலை தாசில்தார் ப.சுந்தரம் உள் ளிட்ட வருவாய் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# திருப்பூர் மாவட்ட கபடி கழகம் சார்பில் அரசு கல்லூரி மாணவிக்கு தையல் எந்திரம்

திருப்பூர், செப். 21

அரசு கல்லூரி மாணவிக்கு தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்ச்சி நடை பெற்றது. மாணவி உமாதேவிக்கு, படிப்புக்கு தேவையான தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.



திருப்பூர் மாவட்ட கபடி கழகம் சார்பில், அரசு கல்லூரி மாணவிக்கு தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட கபடி கழக தலைவர் கொங்கு முருகேசன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஜெயசித்ரா சண்முகம், பொருளாளர் கன்னிமார்ஸ் ஆறுச் சாமி, செய்தித் தொடர்பாளர் சிவபா லன் ஆகியோர் முன்னிலை வகித் தனர்.

இதில் பல்லடம் அரசு கலைக் கல்லூரியில் காஸ்ட்யூம் டிசைன், பேஷன் டெக்னாலஜி பயிலும் திருப்பூர் கணபதிபாளையத்தைச் சேர்ந்த மாணவி உமாதேவிக்கு, படிப்புக்கு தேவையான தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. மாவட்ட நடுவர் குழு தலைவர் முத்துசாமி, மாவட்ட புரவலர் மகால ட்சுமி, ரத்தினசாமி, இணை ச்செயலாளர்செல்வராஜ், மாவட்ட செயற்குழு உறுப்பினர் தேவராஜ், கௌரவ உறுப்பினர் பிரேமா மணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# இந்து மதத்தை இழிவுபடுத்தினால் வேடிக்கை பார்க்க மாட்டோம்: இந்து முன்னேற்ற கழக தலைவர் வக்கீல் கே.கோபிநாத் பேச்சு

திருப்பூர், செப். 21

விநாயகர் சதுர்த்தி எழுச்சி திரு விழா மற்றும் பொதுக்கூட்டம் நேற்று திருப்பூரில் நடைபெற்றது இந்து பண்பாடு, கலாசாரத்தை காக்க இந்து முன்னேற்ற கழகம் போராடும்

இந்து பண்பாட்டை காக்க இந்து முன்னேற்ற கழகம் போராடும் என்று திருப்பூரில் நடந்த விநாயகர் சதுர்த்தி விழா பொதுக்கூட்டத்தில் அமைப்பின் தலைவர் வக்கீல் கே.கோபிநாத் பேசினார். விநாய கர் சதுர்த்தியையொட்டி இந்து முன்னேற்ற கழகம் சார்பில் 10ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி எழுச்சி திருவிழா மற்றும் பொதுக்கூட்டம் நேற்று திருப்பூரில் நடைபெற்றது. இந்து முன்னேற்ற கழகம் சார்பில் வைக்கப்பட்ட 20 விநாயகர் சிலை கள் கொங்கணகிரி கோவில் முன் புறம் இருந்து ஊர்வலமாக புறப் பட்டு ஆலங்காட்டுக்கு வந்தது. பின்னர் இரவு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு இந்து முன்னேற்ற கழக மாநில பொதுச்செயலாளர் எம்.எஸ்.செந் தில்குமார் தலைமை தாங்கினார். மாநில செயலாளர் ஹரிகிருஷ் ணன் வரவேற்றார். இந்து முன் னேற்ற கழக தலைவர் வக்கீல் கே.கோபிநாத் பேசியதாவது: இந் துக்களுக்கு என்று இருக்கும் ஒரே நாடு இந்தியா தான். இங்கு மதத்தை வைத்து சிலர் பிழைப்பு நடத்துகிறார்கள். விநாயகர் சதுர்த்தி விழாவுக்கு இந்துக்கள் சிலை வைக்கக்கூட அனுமதி மறுக்கப்படுகிறது. அதற்கு இந்து அமைப்புகளே தடையாக இருப் பதுதான்வேதனையானது.நம்மை அடிமைப்படுத்திய ஆங்கிலே யரை விரட்ட விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்பட்டது. இந் துக்கள் ஒற்றுமையுடன் எழுச்சி விழாவாக கொண்டாடவே விநா யகர் சதுர்த்தி விழா நடக்கிறது. இந்து மதத்தை இழிவுபடுத்தி னால் அதை வேடிக்கை பார்க்க மாட்டோம். இந்து மதத்துக்கும், இந்து உணர்வுக்கும், இந்து பெண் களுக்கும், இந்து பண்பாடு, கலா சாரத்தை காக்க இந்து முன்னேற்ற கழகம் போராடும். இளைஞர்கள் இந்து பண்பாட்டை காக்க முன்வர வேண்டும். இவ்வாறு அவர் கூறி னார். கூட்டத்தில் மாவட்ட தலை வர் ஸ்ரீகாந்த், இந்து தேசிய கட்சி நிறுவனர் மணி, இந்துஸ்தான் மக் கள் இயக்கம் நிறுவனர் மணி, அகில இந்திய இந்து மகா சபா மாவட்ட தலைவர் வல்லபை பாலா மற்றும் நிர்வாகி சாமி ஆகி யோர் சிறப்புரையாற்றினா ர்கள். நிர்வாகிகள் ராதா சுதீஷ், அருண்கு மார், பன்னீர்செல்வம், அசோக் உள்பட திரளானவர்கள் கலந்து கொண்டனர். பொதுக்கூட்டம் முடிந்ததும் விநாயகர் சிலைகள் வாகனங்கள் மூலமாக சாமளாபு ரம் குளத்தில் விசர்ஜனம் செய்யப் பட்டன.

# நீட் விவகாரத்தில் மத்திய அரசின் சூழ்ச்சி அம்பலமாகியுள்ளது: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

சென்னை, செப். 21

நீட் முதுநிலை தகுதி மதிப்பெண் பூஜ்ஜியமாக குறைக்கப்பட்டு இருக்கிறது. மத்திய அரசின் இந்த முடிவுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காட்டமாக பதிலளித்துள்ளார்.

மருத்துவ படிப்புகளில் சேர்வதற்கான தகுதித் தேர்வை தேசிய தேர்வு முகமை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது. நாடு முழுக்க பிளஸ்2 முடித்த மாணவமாணவிகள் நீட் தேர்வு எழுதி அதன் மூலம் அரசு மருத்துவ கல்லூரிகளில் சேர்ந்து பயின்று வருகின்றனர். இந்த நிலையில், நீட் முதுநிலை தகுதி மதிப்பெண் பூஜ்ஜியமாக குறைக்கப்பட்டு இருக்கிறது. இது குறித்து மத்திய அரசின் மருத்துவ கலந்தாய்வு குழு வெளியிட்டு இருக்கும் அறிக்கையில், "நீட் தேர்வில் பூஜ்ஜியம் மதிப்பெண் எடுத்து இருந்தாலும், முதிநிலை மருத்துவ படிப்பில் சேர முடியும்," என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. மத்திய அரசின் இந்த முடிவுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காட்டமாக பதிலளித்துள்ளார். இதுகுறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறியிருப்பதாவது: நீட் தேர்வில் பூஜ்ஜியம் பெர்சன்டேஜ் எடுத்தாலே முதுநிலை மருத்துவம் படிக்கலாம் என்ற மத்திய அரசின் அறிவிப்பு இத்தேர்வின் சூழ்ச்சியை அம்பலமாக்கியுள்ளது. தகுதி, தகுதி என்று சொல்லிவிட்டு தேர்வை எழுதினாலே முதுநிலை மருத்துவம் படிக்கலாம் என்றால், அந்த தேர்வை ஏன் நடத்த வேண்டும்? தனியார் பயிற்சி மையங்களையும், தனியார் மருத்துவக் கல்லூரிகளையும் வளப்படுத்துவதற்கான ஏற்பாடுதான் நீட் தேர்வு என்று நாங்கள் கூறி வந்தது இன்றைக்கு உண்மையாகியுள்ளது. மருத்துவராகும் கனவுடன் புறப்படும் ஏழை, எளிய பிள்ளைகளை மரணக்குழியில் தள்ளும் நீட் அநிநீக்கு, மத்திய அரசு பதில் சொல்லும் நாள் தொலைவில் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.



# "பல் இல்லாத உனக்கு எதற்கு மனைவி என கேட்டதால்" நண்பனின் 5 பல்லை அடித்து உடைத்த தொழிலாளி

திருப்பூர், செப். 21

திருப்பூர் குமார்நகரை அடுத்த வளையங்காடு பகுதியை சேர்ந்தவர் பாண்டியன் (வயது 36). தையல் தொழிலாளி. அதே பகுதியைச் சேர்ந்தவர் காளிமுத்து (45). நண்பர்களான இருவரும் மதியம் முதல் திருப்பூர் காந்திநகர் அருகே மது அருந்தி உள்ளனர். போதை தலைக்கு ஏறிய நிலையில் இரவு இருவரும் டாஸ்மாக் பாரை விட்டு வெளியே வந்துள்ளனர். அப்போது பாண்டியன் காளிமுத்துவை பார்த்து "பல் இல்லாத உனக்கு எதற்கு பொண்டாட்டி" என கேட்டுள்ளார். இதில் அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டுள்ளது. ஆத்திரமடைந்த காளிமுத்து அருகில் கிடந்த உருட்டு கட்டையை எடுத்து உனக்கு பல் இருப்பதால் தானே இப்படி பேசுகிறாய் உன் பல் அனைத்தையும் உடைத்து விடுகிறேன் என்று கூறிக்கொண்டு பாண்டியன் மீது கொலை வெறி தாக்குதல் நடத்தினார். பாண்டியன் கீழே தரையில் படுத்திருந்த நிலையில் காளிமுத்து உருட்டு கட்டையால் தொடர்ந்து பாண்டியன் முகத்தில் ஓங்கி அடித்தார். இதில் பலத்த காயமடைந்த பாண்டியனின் 5 பற்கள் உடைந்தது. இதனைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த பொதுமக்கள் காளிமுத்துவை தடுத்து அனுப்பர்பாளையம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் பாண்டியனை மீட்டு சிகிச்சைக்காக அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் காளிமுத்துவை பிடித்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் பாண்டியனை மீட்டு சிகிச்சைக்காக அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். வீடியோ வாட்ஸ்அப், முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

இது தொடர்பான வீடியோ வாட்ஸ்அப், முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது. இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# உடுமலை பகுதியில் குடிநீர் தட்டுப்பாட்டால் மக்கள் அவதி

உடுமலை, செப். 21

வாரத்திற்கு 2 முறை வந்து கொண்டிருந்த தண்ணீர் 2 வாரத்துக்கு ஒரு முறை வரும் சூழல் நிலவுகிறது. மக்கள் தொகைக்கு ஏற்ப தண்ணீர் வழங்கும் நடைமுறையில் மாற்றம் செய்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டு இருக்காது.

உடுமலை பகுதியில் நிலவுகின்ற நிர்வாக குளறுபடிகள், குடிநீர் குழாய் உடைப்புகள் காரணமாக கிராமங்களில் கடும் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது. இதுகுறித்து குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளும் கண்டு கொள்வதில்லை.

இதனால் வாரத்திற்கு 2 முறை வந்து கொண்டிருந்த தண்ணீர் 2 வாரத்துக்கு ஒரு முறை வரும் சூழல் நிலவுகிறது. இதனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நாள்தோறும் குடிநீரை வழங்க முடியாமல் பொதுமக்களின் அதிருப்தியை சம்பாதித்து வருகிறார்கள். இது தொடர்பாக மன்ற நிர்வாக கூட்டங்களில் கோரிக்கை வைத்தும் பலன் இல்லை . மக்கள் நலனில் அக்கறை கொண்டு அவர்களின் தேவையை பூர்த்தி செய்யாத குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகம் எதற்கு?அதில் பணிபுரியும் அதிகாரிகள் எதற்கு? என்ற கேள்வியே நம் முன்னே நிற்கிறது.கிராமங்களில் உள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப கணக்கீடு செய்து தண்ணீர் வழங்கும் நடைமுறையில் மாற்றம் செய்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டு இருக்காது.

எனவே பொதுமக்கள் நலனுக்கு எதிராக செயல்பட்டு வரும் உடுமலை பகுதி குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து சீரான முறையில் குடிநீர் வழங்குவதற்கு மாவட்ட நிர்வாகம் முன்வர வேண்டும் என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை: பள்ளிகளுக்கு அதிரடி உத்தரவு

காங்கயம், செப். 21

கல்வித்துறை அனைத்து பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. மின்கசிவு, மின் சுற்று கோளாறுகள் உள்ளனவா என்பதையும் ஆய்வு செய்து பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ள நிலையில், பள்ளிகளில் பின்பற்றப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தமிழக கல்வித்துறை, பள்ளிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பி உள்ளது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை, அக்டோபர் முதல் டிசம்பர் வரையான கால அளவில், இயல்பான அளவில் பெய்யும் என வானிலை அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இந்நிலையில் பள்ளிகளில் பருவ மழை காரணமாக விபத்துகள் எதுவும் ஏற்படாமல் இருக்க பின்பற்றப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கல்வித்துறை அனைத்து பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில் தொடர் மழை காரணமாக பள்ளியின் சுற்று சுவர் மிகுந்த ஈரப்பதத்துடன் காணப்படலாம். எனவே, சுற்று சுவர் உறுதி தன்மையை கண்காணிக்க வேண்டும்.

பழுதடைந்துள்ள சுற்றுச்சுவர் பகுதிகளை சுற்றி, வேலி அல்லது தடுப்புகளை ஏற்படுத்த வேண்டும். பள்ளியில் சில வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் பாதிக்கப்பட்டு இருந்தால் அதை பயன்படுத்தாமல் பூட்டி வைக்க வேண்டும். அனைத்து மின் இணைப்புகள் சரியாக இருக்கின்றனவா எனவும், மின்கசிவு, மின் சுற்று கோளாறுகள் உள்ளனவா என்பதையும் ஆய்வு செய்து பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். தேவைப்பட்டால் மின் இணைப்பை துண்டிக்கலாம். மின் மோட்டார்கள் அமைந்துள்ள இடங்கள் பாதுகாப்பாக உள்ளனவா என உறுதி செய்து கொள்ள வேண்டும்.

பள்ளி வளாகத்தில் நீர் தேக்க பள்ளங்கள், திறந்த வெளி கிணறுகள், கழிவு நீர்தொட்டி, தரைமட்ட நீர் தேக்க தொட்டி இருந்தால் அது மூடப்பட்ட நிலையில், பாதுகாப்பாக உள்ளனவா என உறுதி செய்ய வேண்டும். பள்ளி வளாகத்தில் விழும் நிலையில் மரங்கள் இருந்தால் அதை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.ஆபத்தான நிலையில் உயர் மின்னழுத்தம் உள்ள மின் கம்பங்கள், அறுந்து தொங்கக்கூடிய மின் கம்பிகள் இருந்தால் அதை மின்வாரியத்தின் உதவியுடன் அகற்ற வேண்டும்.

பள்ளியில் உள்ள அனைத்து கட்டடங்களின் மேற்கூரைகள், கைப்பிடி சுவர்கள், மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள், ஜன்னல் கதவுகள் உறுதியாக இருக்கிறதா என ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். பள்ளிகளில் இடிக்கப்பட வேண்டிய கட்டடங்கள் இருப்பின் மாவட்ட நிர்வாகத்தை தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாணவர்கள் அதன் அருகே செல்லாமல் பாதுகாப்பு வளையம் ஏற்படுத்த வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருப்பூரில் பட்டாசு கடைகளுக்கு விண்ணப்பிக்கலாம்: மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் அறிவிப்பு

திருப்பூர், செப். 21

பட்டாசு கடைகள் வைக்க விரும்புவோர் வரும் அக்., 20ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். தீபாவளி பண்டிகை முன்னிட்டு கலெக்டர் கிறிஸ்துராஜ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தில் ஊரகப் பகுதியில் தற்காலிக பட்டாசு கடைகளுக்கு உரிமம் பெற விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது: தீபாவளி பண்டிகை முன்னிட்டு, திருப்பூர் ஊரகப் பகுதியில் தற்காலிக பட்டாசு கடைகள் வைக்க விரும்புவோர் வரும் அக்., 20ம் தேதிக்குள், உரிய விவரங்களுடன் அனைத்து இசேவை மையங்களிலும் விண்ணப்பிக்கலாம். கடை அமையும் இடத்தின் வரைபடம். பட்டா மற்றும் ஆவணம், உரிமக் கட்டணம், 600 ரூபாய் செலுத்தியசலான், சொத்து வரிக்கான ரசீது, வாடகை கட்டடம் எனில் வாடகை ஒப்பந்த பத்திரம், விண்ணப்பதாரர் போட்டோ, முகவரி சான்று மற்றும் தீயணைப்பு துறை சான்று ஆகியவற்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.இவ்வாறு அவர் அதில், கூறியுள்ளார்."

# வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.45 லட்சத்திற்கு தேங்காய் பருப்பு விற்பனை

வெள்ளகோவில், செப். 21

வெள்ளகோவில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரம்தோறும் செவ்வாயன்று தேங்காய் பருப்பு, வியாழனன்று சூரியகாந்தி விதை ஏலம் நடைபெறும். இந்த ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் வாணியம்பாடி, மூலனூர், கரூர், ஸ்ரீரங்கம், திருச்சி பகுதி விவசாயிகள் கலந்து கொண்டு தேங்காய் பருப்புமற்றும்சூரியகாந்தி விதை விற்பனைக்கு கொண்டு வருவார்கள். இந்நிலையில் நேற்று செவ்வாய்கிழமை 125 விவசாயிகள் கலந்து கொண்டு 64ஆயிரத்து 921கிலோ தேங்காய் பருப்பு விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.



இதில், வெள்ளகோவில், காங்கேயம், முத்தூர், ஊத்துக்குளி பகுதியைச்சேர்ந்த 10 வியாபாரிகள் கலந்து கொண்டு ஒரு கிலோ தேங்காய் பருப்பு அதிகபட்சமாக ரூ. 77.90 க்கும், குறைந்தபட்சம் ரூ.58 க்கும் கொள்முதல் செய்தனர். நேற்று மொத்தம் ரூ.45லட்சத்து ஆயிரத்து 600க்கு வணிகம் நடைபெற்றது. இத்தகவலை வெள்ளகோவில் ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சி. மகுடேஸ்வரன் தெரிவித்தார்.

# திருப்பூர் அமராவதிபாளையம் சந்தையில் ரூ.5 கோடிக்கு மாடுகள் விற்பனை

திருப்பூர், செப்.21

அமராவதி பாளையம் பகுதியில் வாரம் தோறும் திங்கள்கிழமை மாட்டு சந்தை நடைபெறும் கேரளா, ஆந்திரா, கர்நாடக மாநிலத்தை சேர்ந்த வியாபாரிகள் வந்து இருந்தனர்.

திருப்பூர் அமராவதி பாளையம் பகுதியில் வாரம் தோறும் திங்கள்கிழமை மாட்டு சந்தை நடைபெறும். அதன்படி இந்த வாரம் அமராவதி பாளையம் மாட்டு சந்தையில் 642 மாடுகள் 146 வாகனங்களில் கொண்டுவரப்பட்டது.மாடுகளை வாங்கவும் விற்கவும் தமிழகம் மட்டுமின்றி கேரளா, ஆந்திரா, கர்நாடகமாநிலத்தை சேர்ந்த வியாபாரிகள் வந்து இருந்தனர். மாட்டு சந்தையில் கறவை மாடுகள் ரூ.47 ஆயிரம் முதல் ரூ.56 ஆயிரம் வரை விற்பனை ஆனது.



பசு கன்றுகள் ரூ.11 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வரை விற்பனை ஆனது. எருமை மாடுகள் ரூ.45 ஆயிரம் முதல் ரூ.60 ஆயிரம் வரை விற்பனை ஆனது.

எருமை கன்றுகள் ரூ.18 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரையும் விற்பனை ஆனது. மொத்தம் ரூ.5 கோடி ரூபாய்க்கு அமராவதி பாளையம் மாட்டு சந்தையில் விற்பனை நடைபெற்றது.

# தொழிற்பயிற்சி நிலைய சான்றிதழ் பெற்றவர்கள் 10,12 ம் வகுப்புக்கு இணையான சான்றிதழ் பெற விண்ணப்பிக்கலாம்

திருப்பூர் , செப். 21

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை சார்பில் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்து செல்லும் திறன் பெற்ற பயிற்சியாளர்கள் மேற்படிப்பினை தொடர 10ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்புக்கு இணையான சான்றிதழ் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இணையான சான்றிதழ்கள் பெற நிலையான வழிகாட்டுதல்கள் (SOP) www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தற்போது அகில இந்திய தொழிற்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட நிலையில், தமிழக பள்ளிகல்வி துறையின் கீழ் நடத்தப்பட்ட மொழித் தேர்வில் தனித் தேர்வர்களாக கலந்து கொண்டு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்புக்கு இணையான சான்றிதழ் பெற தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இணையதளத்தில் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து உரிய கல்வி சான்றிதழ்களை இணைத்து 3.10.2023 தேதிக்குள் திருப்பூர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமாக விண்ணப்பிக்கலாம் என அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் பிரபு தெரிவித்துள்ளார்.

# 5 ரெயில்களின் இயக்கத்தில் மாற்றம்

திருப்பூர்,செப்.21

செகந்திராபாத் ரெயில்வே கோட்டத்துக்கு உட்பட்ட, மகுடி சிர்புர் டவுன் காகஸ்நகர் பிரிவு இடையே புதிய பிளாட்பாரம் அமைக்கும் பணி துவங்குகிறது. இதனால் அவ்வழியாக பயணிக்கும் ரெயில்கள் வழித்தடம், இயக்கம், நின்று செல்லும் நிலையங்கள் குறைக்கப்பட்டுள்ளது. வருகிற 25ந்தேதி பிலாஸ்பூர் எர்ணாகுளம் வாராந்திர ரெயில் (எண்: 22815) மஜ்ரி ஜங்ஷன் பெட்டபல்லி ஜங்ஷன் வழியாக மாற்று வழியில் இயக்கப்படும். வழக்கமான வழித்தடமான சந்திராபூர், பால்ஹர்ஷஹ் ஜங்ஷன், சிர்பூர் காகஸ்நகர் நிலையங்களுக்கு செல்லாது. இதே நாளில் கொச்சுவேலிகோர்பா(எண்:22648) ரெயில், அட்டவணையில் உள்ள வழித்தடமான கம்மம், வாரங்கல், ராமகுண்டம், பெலம்பல்லி, டுர்க் ஜங்ஷன் வரை 10 நிலையங்களுக்கு செல்லாது. விஜயவாடா பிலாஸ்பூர் வழித்தடத்தில் இயக்கப்படும். நாளை 21, 22 மற்றும் 24 ந்தேதி, கோரக்பூர் கொச்சுவேலி ரெயில் (எண்:12511) இன்று 20 மற்றும் 23ந்தேதி கோர்பா கொச்சுவேலி ரெயில் (எண்: 22647), 21ந்தேதி, கொச்சுவேலி கோர்பா (எண்:22648), 22ந்தேதி எர்ணாகுளம் பரூனி (எண்:12522), இதே நாளில் கோவையில் இருந்து புறப்படும் ஜெய்பூர் எக்ஸ்பிரஸ் (எண்:12969) ரெயில் ஆகிய 5 ரெயில்கள் தெலுங்கானா மாநிலம், சிர்பூர் காகஸ்நகர் நிலையத்தில் நிற்காது என தெற்கு ரெயில்வே சேலம் கோட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# உணவகங்களில் சோதனை விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 16 கிலோ கெட்டுப்போன இறைச்சி, அழுகிய மீன்கள் பறிமுதல்

திருப்பூர் , செப். 21

அதிக செயற்கை நிறமிகள் சேர்க்கப்பட்ட, கெட்டுப்போனகோழி இறைச்சிகளை கைப்பற்றி அழித்தனர். 8 கடை உரிமையாளர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டது.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள உணவகங்களில் உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் மேற்கொண்ட ஆய்வில் 16 கிலோ கெட்டுப் போன கோழி இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டது. திருப்பூர்மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் அறிவுறுத்தலின் பேரில், திருப்பூர்மாவட்டஉணவு பாதுகாப்புத் துறை நியமன அலுவலர் விஜயலலிதாம்பிகை தலைமையில், மாவட்டத்தில் உள்ள சவர்மா தயாரித்து விற்பனை செய்யும் உணவகங்கள் உள்ளிட்ட அனைத்து அசைவ உணவகங்களிலும் அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டனர். இதில் அதிக செயற்கை நிறமிகள் சேர்க்கப்பட்ட, கெட்டுப்போன கோழி இறைச்சி சுமார் 16 கிலோ, கெட்டுப் போன மீன் இறைச்சி 3.5 கிலோ, காலாவதி ஆகி பயன்படுத்த முடியாத நிலையில் இருந்த சுமார் 750 கிராம் மயோனிஸ் ஆகியவை கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டது. சுகாதாரமற்ற முறையில் உணவு தயாரித்து விற்பனை செய்து வந்த 5 உணவு வணிகர்களுக்கு ரூ.1,000 வீதம், ரூ.5 ஆயிரம், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகள் வைத்திருந்த ஒரு உணவு வணிகருக்கு ரூ.2 ஆயிரம் என மொத்தம் 6 கடைக்காரர்களுக்கு ரூ.7 ஆயிரம் அபராதம் விதிக்கப்ப ட்டது. மேலும், 43 கடைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது, 8 கடை உரிமையாளர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டது. இது தொடர்பாக திருப்பூர்மாவட்டஉணவு பாதுகாப்பு துறை அதிகாரி விஜயலலிதா ம்பிகையிடம் கேட்டபோது அவர்கூறியதாவது:திருப்பூர் மாவட்டம் முழுவதும் சவர்மா கடைகளில் அதிரடி சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் சவர்மா தயாரிப்பாளர்கள் உணவு பாதுகாப்புதுறையில் உரிமம் பெற்றிருக்க வேண்டும். உணவு பாதுகாப்பு துறையில் உரிமம் பெற்றவர்களிடம் மட்டுமே கோழி இறைச்சி போன்ற மூலப் பொருட்களை வாங்கி பயன்படுத்த வேண்டும். இறைச்சி மற்றும் இதர மூல பொருட்கள் வாங்கியதற்கான பில் எப்போதும் வைத்திருக்க வேண்டும். திருப்பூர் மாவட்டத்தில் யாராவது இந்த விதிமுறை களை பின்பற்றாமல் சவர்மா தயாரித்து விற்பனை செய்தால் அவர்கள் கடைகளுக்கு எந்தவித முன்னறிவிப்பும் இன்றி சீல் வைக்கப்படும். பொதுமக்கள் குறிப்பாக பள்ளி, கல்லூரி மாணவர்கள் சவர்மா போன்ற உணவுப் பொருட்களை வாங்கும்போது அது தரமானதாக தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து உணவு பொருட்களை வாங்க வேண்டும். எந்த ஒரு உணவு பொருட்கள் வாங்கும் போதும் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இவ்வாறு அவர் அவர் கூறினார்.



# பொன்னேரியில் நகராட்சி 10வது வார்டு சபை கூட்டத்தை புறக்கணித்து பொதுமக்கள் போராட்டம்

பொன்னேரி, செப். 21

பருவ மழை காலம் தொடங்குவதற்கு முன்பாக சாலையை சீரமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். சாலை மறியல் போராட்டத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.



பொன்னேரி நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டு மந்தகதியில் நடைபெற்று வருகிறது. இந்த திட்டம் ஆமை வேகத்தில் நடைபெற்று கொண்டிருப்பதால் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் ராட்சத பள்ளங்களால் மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக 10வது வார்டு பர்மா நகர் பகுதியில் சுமார் 1000க்கும் மேற்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வசித்து வருகின்றனர். இங்கு பாதாள சாக்கடை பணிகள் தோண்டடப்பட்டு முடிவடைந்த நிலையில் சாலையை சீரமைக்காமல் கிடப்பில் போடப்பட்டதால் அண்மையில் பெய்த மழையால் சாலையில் குளம் போல் தேங்கி நிற்கும் தண்ணீரில் அடிக்கடி விபத்து ஏற்படுவதாகவும் மேலும் தேங்கி நிற்கும் தண்ணீரில் கொசுக்கள் உற்பத்தியாகி நோய் தொற்று பரவும் சூழல் ஏற்பட்டுள்ளது. குழந்தைகளின் பள்ளி சீருடை அழுக்காகி பள்ளிக்கு செல்வதாகவும் வயதானவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முடியாமல் தவிப்பதாகவும் சேற்றில் நடந்து கால்களில் சேற்றுப்புண், தோல் வியாதி வருவதாகவும் தெருக்களில் சாலை அமைத்து தரக் கோரி வார்டு கவுன்சிலர் மற்றும் நகராட்சியிடம் பலமுறை புகார் அளித்தும் எந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் இந்த நிலையில் வார்டு சபை கூட்டம் 10வது வார்டு பர்மாநகர் பகுதியில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில் அப்பகுதி மக்கள் கூட்டத்தை புறக்கணித்து திடீரென்று பர்மா தெரு சாலையில் அமர்ந்து சாலையை சீமரமைக்க வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் நகராட்சி அதிகாரிகளுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும் பருவ மழை காலம் தொடங்குவதற்கு முன்பாக சாலையை சீரமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த அப்பகுதி வார்டு கவுன்சிலர் வேலா கதிரவன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததின் பேரில் போராட்டம் கைவிடப்பட்டது திடீர் சாலை மறியல் போராட்டத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# போதிய மழை இல்லை: சீத்தாப்பழம் விளைச்சல் பாதிப்பு



தருமபுரி, செப்.21

தற்பொழுது ஒரு சில செடிகளில் மட்டும் காய்கள் பிடித்து வருகிறது. நாள் ஒன்றுக்கு 10 முதல் 20 கூடைகள் வரை மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் பகுதியில் உள்ள பிக்கிலி, மலையூர், வாரக்கொல்லை உள்ளிட்டமலைகிராமங்களில் சுமார் 15 ஏக்கர் பரப்பில் சீத்தாப்பழம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு நிலவும் சீதோசன நிலையால் சீத்தாப்பழம் அதிக அளவில் மகசூல் தருகிறது. மலை கிராமத்தில் விளையும் சீத்தாப்பழங்களை வியாபாரிகள் நேரடியாக கொள்முதல் செய்து சென்னை, கோவை, கேரளா போன்ற பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை சீத்தாப்பழம் சீசன் நிலவுகிறது. விவசாயிகள் சீத்தா பழங்களை அறுவடை செய்து கூடைகளில் எடுத்து வந்து வெளியூரிலிருந்து மலையூர் கிராமத்திற்கு வருகை தரும் வியாபாரி களிடம் விற்பனை செய்து வருகின்றனர். நல்ல தேர்ந்தெ டுக்கப்பட்ட பெரிய அளவிலான பழங்கள் சராசரி கிலோ ரூ.20க்கும், கூடை 200 முதல் 250 ரூபாய் வரை என குறைந்த விலையில் வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். கடந்த ஆண்டு நல்ல மழை பெய்ததால் சீத்தாப்பழம் விளைச்சல் அதிகமாக இருந்தது. இதனால் தினந்தோறும் டன் கணக்கில் மலை கிராம மக்கள் விற்பனை செய்தனர். இந்நிலையில் கடந்த ஆண்டு சீத்தாப்பழம் சுமார் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்தனர். இதனால் விவசாயிகளுக்கு நல்ல வருவாய் கிடைத்தது. இந்த நிலையில் இந்த ஆண்டு பருவ மழை ஏமாற்றியதால், சீத்தாப்பழம்சீசன்தொடங்குகின்ற நேரத்தில் செடிகள் தண்ணீர் இன்றி வறண்டு காணப்பட்டது. இதனால் செடிகளில் வைக்கின்ற காய்கள் முழுவதும் தண்ணீர் இன்றி காய்ந்துகருகி, கீழே கொட்டியது.

மேலும் மழை தாமதமாக பெய்து வருவதால், தற்பொழுது ஒரு சில செடிகளில் மட்டும் காய்கள் பிடித்து வருகிறது. ஆனாலும் வெள்ளை பூச்சிகள் தாக்குதல் இருப்பதால், அந்த பழங்களையும் வியாபா ரிகள் வாங்குவதில்லை. இதனால் விவசாயிகளுக்கு இந்த ஆண்டு பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. அதேபோல் கடந்த ஆண்டு தினமும் 20 முதல் 30 கூடை வரை அறுவடை செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது விவசாயிகள் ஒரு கூடை அறுவடை செய்வது என்பதே சவாலாக இருந்து வருகிறது. இதனால் தினந்தோறும் டன் கணக்கில் ஏற்றுமதி செய்யப்பட்ட வந்த சீத்தா பழங்கள்,

தற்பொழுது நாள் ஒன்றுக்கு 10 முதல் 20 கூடைகள் வரை மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதிலும் வியாபாரிகள் யாரும் மலை மீது வராததால், விவசாயிகளே ஒன்றிணைந்து பிக்கப் வாகனங்கள்மூலம்பாப்பாரப்பட்டி சந்தைக்கு விற்பனைக்கு எடுத்துச் செல்கின்றனர். மேலும் போக்குவரத்து வசதி இல்லாததால், ஒரு கூடை 300 ரூபாய் வரை விற்பனை ஆகின்ற நிலையில், வண்டி வாடகை கூடைக்கு 100 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இதனால் இந்த ஆண்டு சீத்தாப்பழம் விற்பனையில் போதிய வருவாய் கிடைக்கவில்லை என விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

# கழிவுநீரை சுத்திகரிப்பு செய்யாமல் வெளியேற்றிய 4 தொழிற்சாலைகளின் மின் இணைப்பு துண்டிப்பு

ஈரோடு, செப். 21

3 சாய தொழிற்சாலைகள்கழிவுநீரைசுத்திகரிப்பு செய்யாமல் வெளியேற்றியதை அதிகாரிகள் கொண்ட சிறப்புக்குழு கண்டு பிடித்தனர். ரசாயன தொழிற்சாலையின் மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டது.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிப்காட்டில் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. சிப்காட்டில் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளில் வெளியேற்றப்படும் கழிவுநீரால் பாலத்தொழுகுளம் மாசடைவதாக பொதுமக்களிடம் இருந்து புகார் பெறப்பட்டதையடுத்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய தலைமை அலுவலகம் 3 அதிகாரிகளை கொண்ட சிறப்புக் குழுமூலம்கடந்தஆகஸ்ட் 30ந் தேதி முதல் செப்டம்பர் 7ந் தேதி வரை ஆய்வு மேற்கொண்டனர். இதில் 3 சாய தொழிற்சாலைகள் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்யாமல் வெளியேற்றியதை அதிகாரிகள் கொண்ட சிறப்புக்குழு கண்டுபிடித்தனர். இதையடுத்து இந்த 3 சாய தொழிற்சாலைகளை மூட உத்தரவிட்டு அதற்கான ஆணை வழங்கப்பட்டு அந்த 3 தொழிற்சாலைகளின் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

இதேபோல்சிப்காட்டில் உள்ளஒருரசாயனதொழிற்சாலைகழிவுநீரைதொழிற்சாலை வளாகத்திற்கு வெளியே வெளியேற்றியது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அந்த ரசாயன தொழிற்சாலையின் மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டது. சிப்காட் வளாகத்தில் உள்ள அனைத்து தொழிற்சாலைகளும் தங்களின் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களையும் மற்றும் காற்று மாசு தடுப்பு சாதனங்களை முறையாகவும், தொடர்ச்சியாகவும் இயக்கி சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் செயல்பட வேண்டும். அனைத்து தொழிற்சாலைகளும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு தவறு இழைக்கும் தொழிற்சாலை மீது சட்டரீதியாக தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் மாசு கட்டுப்பாடு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அனுமதியின்றி மதுவிற்ற 9 பேர் மீது வழக்கு

ஈரோடு, செப். 21

ஈரோடு மாவட்ட பகுதிகளில் குற்ற சம்பவங்கள் ஏதேனும் நடைபெறுகிறதா என ஈரோடு டவுன், கோபி போலீசார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது பெருந்துறை, சென்னிமலை, பர்கூர், வெள்ளி திருப்பூர், கடத்தூர், சத்தியமங்கலம், பங்களாபுதூர் ஆகிய சுற்று வட்டார பகுதிகளில் அனுமதியின்றி மது விற்று கொண்டிருந்த திருப்பூர் மாவட்டம் போயம்பாளையம் பகுதியை சேர்ந்த வீரபத்திரன் மகன்சுரேஷ்குமார்(வயது 41), கருங்கல்பாளையம் மரப்பாளையம் சாலையை சேர்ந்த சம்பத் மகன் சக்திவேல் (44), சென்னிமலை ஆறுமுகம் மகன் நாகராஜ் (59), பர்கூர் ராஜா (33), அந்தியூர் மாணிக்கம் மகன் பிரபு (41), மங்களாபுரம் சுந்தரம் மகன் சதீஷ் என்ற சுரேஷ் (40), சத்தியமங்கலம் சொர்ணம் மகன் பாலு (55), பாரதி நகர் மினியல் (60), டி.என்.பா ளையம் செல்வன் மனைவி ஈஸ்வரி (45) ஆகியோரை போலீசார் பிடித்தனர். பின்னர் அவர்கள் விற்பனைக்காக வைத்திருந்த 46 மது பாட்டில்களை போலீசார் பறிமுதல் செய்தனர். மேலும் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மூளைச்சாவு அடைந்த நாகை வாலிபரின் உடல் உறுப்புகள் தானம்

தஞ்சாவூர், செப். 21

வாலிபரின் இதயம், நுரையீரல், கல்லீரல், சிறுநீரகங்கள் போன்ற உறுப்புகளை அறுவை சிகிச்சை மூலம் பிரித்தெடுத்தனர். 25 உறுப்புகள் தானமாக பெறப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு 25 நபர்கள் வாழ்க்கையில் நலம் பெற்று இருக்கிறார்கள் என்றார்.

நாகை மாவட்டம் மாங்கோட்டை பகுதியை சேர்ந்த 29 வயது நபர் சாலை விபத்து ஏற்பட்டு தஞ்சை அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.அங்குஅவரை டாக்டர்கள் குழுவினர் பரிசோதனை செய்தபோது அவருக்கு மூளைச்சாவு ஏற்பட்டது தெரிய வந்தது. இது குறித்து டாக்டர்கள் அந்த வாலிபரின் உறவினர்களிடம் தெரியப்படுத்தினர். இதையடுத்து மூளைச்சாவு அடைந்த வாலிபரின் உடல் உறுப்புகளை தானமாக வழங்குவது என அவரின் பெற்றோர்மற்றும்உறவினர்கள் தாமாக முன்வந்து ஒப்புதல் அளித்தனர். இதையடுத்து வாலிபரின் இதயம், நுரையீரல், கல்லீரல், சிறுநீரகங்கள் போன்ற உறுப்புகளை அறுவை சிகிச்சை மூலம் பிரித்தெடுத்தனர். இதயம் மற்றும் நுரையீரலை சென்னை அரசு ஆஸ்பத்திரிக்கும், கல்லீரல் திருச்சி ஆஸ்பத்திரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

இரண்டு சிறுநீரகங்களில் ஒன்று தஞ்சை அரசு மருத்துவகல்லூரி ஆஸ்பத்திரிக்கும், மற்றொன்று மதுரை அரசு ராஜாஜி ஆஸ்பத்திரிக்கும் மற்றும் தோல் மதுரை ஆஸ்பத்திரிக்கும், தமிழ்நாடு உறுப்பு மற்றும் ஆணையத்தின் வழிகாட்டுதல்படி தானமாக வழங்கப்பட்டது. இந்த உறுப்பு தானம் மூலம் 6 நோயாளிகள் பயனடைந்துள்ளனர். இது குறித்து மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பாலாஜி நாதன் கூறுகையில், தஞ்சை அரசு மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரியில் மூளைச்சாவது அடைந்து உறுப்பு தானம் நிகழ்த்தப்படுவது இது 5வது முறையாகும். இது வரை ஆஸ்பத்திரியில் 8 நோயாளிகளுக்கு சிறுநீரகம் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இதுவரை மூளைச்சாவு அடைந்தவர்களிடம் இருந்து மொத்தம் 25 உறுப்புகள் தானமாக பெறப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு 25 நபர்கள் வாழ்க்கையில் நலம் பெற்று இருக்கிறார்கள் என்றார்.

இந்த உறுப்புதான அறுவை சிகிச்சை மேற்கொண்ட மருத்துவ குழு நிபுணர்களான ரத்தநாள அறுவை சிகிச்சை துறை தலைவர் டாக்டர் மருதுதுரை, மயக்கவியல் துறை பேராசிரியர் டாக்டர் சாந்தி பால்ராஜ், சிறுநீரக மருத்துவத்துறை உதவி பேராசிரியர் டாக்டர் ராஜ்குமார், மயக்கவியல் துறை இணை பேராசிரியர் டாக்டர் லியோ, சிறுநீரக மருத்துவத்துறை உதவி பேராசிரியர் டாக்டர் சந்திரசேகர், சிறுநீரக அறுவை சிகிச்சை துறை உதவி பேராசிரியர் டாக்டர் அசோக் ஆகியோரை மருத்துவ கல்லூரி முதல்வர் டாக்டர் பாலாஜி நாதன் பாராட்டினார்.

# கணுக்காலை இழந்த மதுரை ஜூடோ வீரருக்கு அமைச்சர் உதயநிதி நிதியுதவி

மதுரை, செப். 21

போதிய வருவாய் இன்றி தவித்து வரும் தனது குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்றும், பலத்த காயம் அடைந்துள்ள தனது மகனுக்கு அரசு வேலை வழங்க வேண்டும் மாணவரின் தாய் கோரிக்கை விடுத்திருந்தார். பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மதுரை வந்தார்.



மதுரை கோச்சடை முத்துராமலிங்க தேவர் தெரு பகுதியைச் சேர்ந்தவர் தீர்த்தம் என்பவரது மகன் பரிதி விக்னேஸ்வரன் (19). இவர் கோவை கிணத்துக்கடவு பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வருகிறார். மேலும் ஜூடோ விளையாட்டு வீரரான பரிதி விக்னேஸ்வரன் பல்வேறு போட்டிகளிலும் கலந்து கொண்டு ஏராளமான பதக்கங்களை வென்றுள்ளார். இந்த நிலையில் கடந்த ஆகஸ்டு மாதம் மாநில அளவில் நடைபெற இருந்த ஜூடோ போட்டியில் கலந்து கொள்வதற்காக கடுமையான பயிற்சி மேற்கொண்டு வந்தார். இதற்கிடையே ஜூலை மாதம் கோச்சடை பகுதியில் உள்ள தனது நண்பர் வீட்டிற்கு சென்ற போது வழியில் பழுதான அந்த மின்கம்பத்தை மின்சார வாரியத்தினர் கிரேன் மூலம் அகற்றும் பணியில் இருந்தனர். இதில் எதிர்பாராதவிதமாக கிரேனில் இருந்த மின்கம்பம் அறுந்துசாலையில்சென்று கொண்டிருந்த பரிதி விக்னேஸ்வரன் மீது விழுந்தது. உடனடியாக ஆம்புலன்ஸ் உதவியுடன் அவர் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையில் மருத்துவமனையில் அவரது காலில் ஏற்பட்ட காயம் காரணமாக கணுக்கால் வரையில் அறுவை சிகிச்சை செய்து அகற்றப்பட்டது.

போதிய வருவாய் இன்றி தவித்து வரும் தனது குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்றும், பலத்த காயம் அடைந்துள்ள தனது மகனுக்கு அரசு வேலை வழங்க வேண்டும் மாணவரின் தாய் கோரிக்கை விடுத்திருந்தார். இந்தநிலையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மதுரை வந்துள்ள இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், விபத்தில் கணுக்காலை இழந்த ஜூடோ விளையாட்டு வீரர் பரிதி விக்னேஷ்வரனை தான் தங்கியிருந்த ஓட்டலில் நேரில் சந்தித்து ரூ.2 லட்சம் நிதியுதவி வழங்கினார்.

# ஆக்கிரமிப்பால் மழை நீர் வெளியேறாமல் சாலையில் தேங்கியது

மத்தூர், செப். 21

கொசுக்கள் புழு உற்பத்தி செய்ய தொடங்கியதால் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கொசுக்கள் புழு உற்பத்தி செய்ய தொடங்கியதால்நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை மற்றும் சுற்றுவட்டாரங்களில் கடந்த சில தினங்களாக பரவலாக மழை பெய்து வந்தது. இந்த நிலையில் நேற்று இரவு மீண்டும் கனமழை பெய்தது. இதன் காரணமாக ஊத்தங்கரை, மத்தூர், கல்லாவி ஆகிய பகுதிகளில் நீர்நிலைகளில் நீர்வரத்து அதிகரித்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். கனமழை காரணமாக ஊத்தங்கரை சேலம் தேசிய நெடுஞ்சாலையில் எல்.ஐ.சி அலுவலகம் எதிரே தனி நபர் ஆக்கிரமிப்பால் தண்ணீர் வெளியேறும் பாதை இல்லாததால் குளம்போல் தேங்கி நின்றது. அந்த தண்ணீர் வடிந்து செல்வதற்கான வழியில்லாமல் அதில் கொசுக்கள் புழு உற்பத்திய செய்ய தொடங்கியதால் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், இந்த தண்ணீர் தேங்கத்தால் அந்த வழியாக செல்லக்கூடிய இருசக்கர வாகனங்களும், 4 சக்கர வாகனங்களும் சாலையை கடப்பது மிக சவாலாக உள்ளது. இதனால் வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் தண்ணீர் தேங்கிய பகுதி வழியாக இருசக்கர வாகனங்கள் செல்லாமல் எதிர் திசையில் செல்லக்கூடிய ஒரு வழிப்பாதையில் வாகன ஓட்டிகள் செல்கின்றனர். இதனால் விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, உடனடியாக ஆக்கிரமிப்புகளை அகற்றி மழை நீர் வடிகால் பாதையை அடைத்துள்ள பகுதியை உடனடியாக சரி செய்து தண்ணீர் வெளியேற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பாம்பு கடித்து உயிருக்கு போராட்டம்: ஆம்புலன்ஸ் வாகனம் வர தாமதமானதால் பரிதாபமாக உயிரை விட்ட மூதாட்டி

திருச்சுழி, செப். 21



விருதுநகர் மாவட்டம் நரிக்குடி அருகேயுள்ள முத்தனேரி பகுதியை சேர்ந்தவர் முனியாண்டி (வயது 60). இவரது மனைவி குணசுந்தரி (55). இவர் நேற்று காலை ரேஷன் கடையில் பொருட்கள் வாங்கிவிட்டு வீட்டுக்கு சென்ற நிலையில் இவரை பாம்பு கடித்துள்ளது. இதனை அறியாத அவருக்கு நேரம் செல்லச் செல்ல உடலில் விஷம் பரவி சோர்வானார். அதன் பிறகே தன்னை பாம்பு கடித்துள்ளதை உணர்ந்த குணசுந்தரி லேசான மயக்கமடைந்தார். இருப்பினும் அவர் சுய நினைவுடன் இருந்தார். இதனையடுத்து உடனடியாக அவரை மீட்ட உறவினர்கள் ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு நரிக்குடி அரசு மருத்துவமனைக்கு மதியம் 1 மணிக்கு கொண்டு சென்றனர். அங்கு அவருக்கு ரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை நடந்தது. அப்போது வரை குணசுந்தரி சுயநினைவுடன் உறவினர்களிடம் பேசிக் கொண்டிருந்த நிலையில் அவரை மேல்சிகிச்சைக்காக திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல டாக்டர்கள் பரிந்துரைத்தனர். அதற்காக 108 ஆம்புலன்சுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஆம்புலன்ஸ் வாகனம் வர தாமதமானது. சுமார் 1 மணி நேரமாக குணசுந்தரி காத்திருந்தார். இதற்கிடையில் அவருக்கு உடல் முழுவதும் விஷம் பரவி உயிருக்கு போராடினார். பின்னர் சிறிது நேரத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இதைப்பார்த்த அவரது கணவர் மற்றும் உறவினர்கள் கதறித்துடித்தனர். சமீப காலமாக நரிக்குடி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சையளிக்க கூட மருத்துவர்கள் இல்லையென, சிகிச்சைக்காக வந்து இறந்தவர்களின் உறவினர்கள் குற்றம்சாட்டி வந்தனர். இந்நிலையில் தற்போது மருத்துவர்கள் பரிந்துரை செய்த 108 ஆம்புலன்ஸ் வர தாமதமானதால் பரிதாபமாக ஒரு உயிர் போய்விட்டதே என அனைவரும் ஆதங்கப்பட்டனர். முன்னதாக குணசுந்தரியை நரிக்குடிக்கு அழைத்து வந்த மருத்துவமனை ஊழியர்களிடம் பாம்பு கடித்து விட்டது என்று உறவினர்கள் பதட்டத்துடன் கூறியபோது, அங்கு பணியில் இருந்தவர்கள் மருத்துவமனையில் உள்ள சீட்டு பதியும் இடத்தில் நோட்டு வாங்கிவா, முதலில் பெயரை பதிவு செய்ய வேண்டுமென மிகவும் அலட்சியத்துடன் நடந்து கொண்டதாகவும் உறவினர்கள் கூறினர். கடந்த சில நாட்களுக்கு முன்பு இருஞ்சிறை பகுதியை சேர்ந்த அஞ்சலகத்தில் பணிபுரிந்து வந்த ஊழியர் மணிகண்டன் என்பவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. அப்போது இதே நரிக்குடி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்க கூட மருத்துவர்கள் இல்லாததால் தான் பரிதாபமாக உயிரிழந்ததாக அவரது மனைவியும், உறவினர்கள் கோபமடைந்து மருத்துவர்களுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

தற்போதும் இந்த நிலை தொடர்வதால் பொதுமக்கள் உயிருக்கு பயந்து நாளைடைவில் நரிக்குடி அரசு மருத்துவமனை பக்கமே நோயாளிகள் வராமல் போகும் சூழ்நிலை கூட மிக விரைவில் ஏற்படும் என ஆவேசத்துடன் தெரிவித்தனர். எனவே மாவட்ட கலெக்டர் உயிருக்கு போராடும் மனித உயிர்களை காக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நமது தின கனி
Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 21.09.2023

# Fullஆ Fire.. அனல் தெறிக்கும் லியோ புது போஸ்டர்



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரித்துள்ளார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ தாமஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ள இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. அக்டோபர் 19ம் தேதி 'லியோ' திரைப்படம் வெளியாகிறது. படத்தின் வெளியீட்டு தேதி நெருங்க.. நெருங்க இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்து கொண்டே வருகிறது. லியோ போஸ்டர் இதையடுத்து ரசிகர்களுக்கு சர்ப்ரைஸ் கொடுக்கும் விதமாக 'லியோ' படக்குழு தொடர்ந்து போஸ்டர்களை வெளியிட்டு வருகிறது. இந்நிலையில், தற்போது தமிழ் போஸ்டரை வெளியிட்டுள்ளது. அனல் தெறிக்கும் பைக் பக்கத்தில் விஜய் இருக்கும் இந்த போஸ்டரை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் வைரலாக்கி வருகின்றனர்.

# பில்போர்ட் தளத்தில் இடம் பிடித்த அனிருத் பாடல்.. எந்த படத்திலிருந்து தெரியுமா?



தமிழ் திரையுலகின் தவிர்க்க முடியாத இசையமைப்பாளராக வலம் வருபவர் அனிருத், முன்னணி நடிகர்கள் பலரின் படங்களுக்கு இசையமைத்துள்ளார். ரஜினி நடிப்பில் வெளியான 'ஜெயிலர்' திரைப்படத்தில் அனிருத்தின் இசை பெரிது பேசப்பட்டது. இவர் தற்போது விஜய்யின் லியோ, கமலின் இந்தியன் 2 படங்களுக்கு பிசியாக இசையமைத்து வருகிறார். தமிழ் திரையுலகில் கலக்கி கொண்டிருந்த அனிருத், அட்லீ இயக்கத்தில் ஷாருக்கான் நடிப்பில் சமீபத்தில் வெளியான 'ஜவான்' திரைப்படத்தின் மூலம் பாலிவுட்டிலும் தடம் பதித்துள்ளார். இப்படம் ரூ.800 கோடிக்கு



மேல் வசூலை குவித்துள்ளது. அதுமட்டுமல்லாமல் விரைவில் ரூ.1000 கோடியே எட்டிவிடும் என்ற எதிர்பார்ப்பில் படக்குழுவினர் மத்தியில் உள்ளது. இந்நிலையில், இசையமைப்பாளர் அனிருத்தின் பாடல் பில்போர்ட் தளத்தில் இடம்பெற்றுள்ளது. அதாவது, உலகின் பிரபலமான பில்போர்ட் தளத்தின் குளோபல் 200 பிரிவில் 'ஜவான்' படத்தில் இடம்பெற்றிருந்த 'சலேயே' (chaleya) பாடல் 97வது இடத்தை பிடித்துள்ளது. இதனை அனிருத் தனது சமூக வலைதளத்தில் போஸ்டரை பகிர்ந்து தெரிவித்துள்ளார்.




# திரு.மாணிக்கமாக மாறும் சமுத்திரக்கனி

இயக்குநர் நந்தா பெரியசாமி இயக்கத்தில், சமுத்திரக்கனி நடிக்கும் படம் திரு.மாணிக்கம். திரு. மாணிக்கம் திரைப்படம், இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இயக்குநர் நந்தா பெரியசாமி இயக்கத்தில், சமுத்திரக்கனி கதையின் நாயகனாக நடிக்கும் புதிய படம் திரு.மாணிக்கம் என்று தலைப்பிடப்பட்டு இருக்கிறது. மாணிக்கம் என்ற ஒரு மனிதன் எப்படி திரு.மாணிக்கமாக உயர்கிறான் என்பதே இந்தப் படத்தின் அடிப்படைக் கதை.

தமிழ்த் திரையுலகில் கவனிக்கத்தக்கப் படைப்புகளைத் தந்த முன்னணி இயக்குநர் நந்தா பெரியசாமி இயக்கத்தில் உருவாகி இருக்கும் திரு. மாணிக்கம் படத்தில் சமுத்திரக்கனி, அனன்யா, பாரதி ராஜா, நாசர், தம்பிராமையா, ஸ்ரீமன், வடிவுக்கரசி, கருணாகரன், இளவரசு ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். திரு.மாணிக்கம் திரைப்படத்தின் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. தற்போது வெளியாகியுள்ள இந்தப் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் ரசிகர்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது.

# வசூல் வேட்டையை நிகழ்த்தும் ஜவான்



ஜவான்' திரைப்படம் செப்டம்பர் 7ஆம் தேதி வெளியானது. இப்படம் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

தமிழ் திரையுலகில் முன்னணி இயக்குனராக வலம் வரும் அட்லீ இயக்கத்தில் உருவான திரைப்படம் 'ஜவான்'. இதில் ஷாருக்கான் கதாநாயகனாக நடித்துள்ளார். நயன்தாரா கதாநாயகியாக நடித்துள்ள இப்படத்தில் விஜய் சேதுபதி வில்லன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் யோகிபாபு, தீபிகா படுகோனே, பிரியாமணி உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர். பான் இந்தியா படமாக உருவாகியுள்ள 'ஜவான்' செப்டம்பர் 7ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகி விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. ஜவான் போஸ்டர் இந்நிலையில், இப்படத்தின் வசூல் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, 'ஜவான்' திரைப்படம் ரூ.907 கோடிக்கு மேல் வசூலை குவித்துள்ளது. இதனை தயாரிப்பு நிறுவனம் போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பால் உற்சாகமான ரசிகர்கள் போஸ்டரை வைரலாக்கி வருகின்றனர்.

# உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி: ஜெய்ஷாவிற்கு நன்றி தெரிவித்த ரஜினிகாந்த்

ரஜினி நடித்த 'ஜெயிலர்' திரைப்படம் மிகப்பெரும் வெற்றியடைந்தது. 'லால் சலாம்' திரைப்படம் விரைவில் வெளியாகவுள்ளது.

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகராக வலம் வருபவர் ரஜினி. இவர் தன் திறமையினாலும் ஸ்டைலினாலும் பல ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார். ரசிகர்கள் இவரை 'சூப்பர் ஸ்டார்' என்று அன்போடு அழைத்து வருகின்றனர். நெல்சன் இயக்கத்தில் ரஜினி நடித்த 'ஜெயிலர்' திரைப்படம் மிகப்பெரும் வெற்றியடைந்தது. தொடர்ந்து ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கத்தில் இவர் 'லால் சலாம்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படம் விரைவில் திரைக்கு வரவுள்ளது. படப்பிடிப்புகளை முடித்த ரஜினி சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல அரசியல் தலைவர்களை சந்தித்தார். நடிகர் ரஜினிக்கு இந்தியாவில் நடைபெறும் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகளை காண்பதற்கான கோல்டன் டிக்கெட்டை பி.சி.சி.ஐ செயலாளர் ஜெய்ஷா வழங்கி கவுரவித்தார். இந்நிலையில், ஜெய்ஷாவிற்கு நன்றி தெரிவித்து ரஜினி சமூகவலைதளத்தில் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "2023ஆம் ஆண்டு உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான கோல்டன் டிக்கெட்டை பி.சி.சி.ஐயிடம் இருந்து பெற்றுக் கொண்டதில் மகிழ்ச்சி. ஜெய்ஷா உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி. உங்கள் அன்பான வார்த்தைகளுக்கும் எண்ணங்களுக்கும் மிக்க நன்றி" என்று குறிப்பிட்டுள்ளார்.





# ஆசிய விளையாட்டு போட்டியில் இந்திய ஹாக்கி அணி பதக்கம் வெல்லும்: கேப்டன் நம்பிக்கை



19வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவில் ஹாங்சோவ் நகரில் வருகிற 23ந் தேதி தொடங்குகிறது. இந்த போட்டிக்கு தயாராகுவதற்காக பெங்களூருவில் உள்ள இந்திய விளையாட்டு ஆணைய (சாய்) மையத்தில் பயிற்சி பெற்று வந்த இந்திய ஹாக்கி அணி நேற்று விமானம் மூலம் சீனாவுக்கு புறப்பட்டு சென்றது. முன்னதாக இந்திய ஹாக்கி அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத் சிங் அளித்த பேட்டியில், 'ஆசிய விளையாட்டு போட்டிக்காக இந்திய அணி தீவிரமாக தயாராகி இருக்கிறது. சமீபத்தில் சென்னையில் நடந்த ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை போட்டியில் நமது அணி நன்றாக விளையாடி கோப்பையை வென்றது. அத்தகைய சிறந்த செயல்பாட்டை தொடர வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோளாகும். எங்களது பிரிவில் சில கடினமான அணிகள் இடம் பெற்று இருக்கின்றன. இருப்பினும் நாங்கள் சிறப்பாக தயாராகி இருப்பதால் பதக்கம் வெல்ல முடியும் என்று நம்புகிறோம்' என்றார். இதேபோல் துணைகேப்டன் ஹர்திக் சிங் கூறுகையில், 'ஆசிய போட்டிக்காக கடுமையான பயிற்சியை மேற்கொண்டு இருப்பதுடன் எல்லோரும் ஒரே இலக்கை நோக்கி செயல்பட்டு வருகிறோம். நாங்கள் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் நல்ல நிலையில் போட்டிக்கு செல்கிறோம். கடந்த சில மாதங்களை போல் தொடர்ந்து சிறப்பாக செயல்படுவதுடன் சீனாவில் இருந்து பதக்கத்துடன் திரும்புவதே எங்களது இலக்கு' என்றார். ஆண்கள் ஹாக்கி போட்டியில் பங்கேற்கும் 12 அணிகள் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இதில் இந்திய அணி 'ஏ' பிரிவில் இடம் பிடித்துள்ளது. சிங்கப்பூர், ஜப்பான், பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், வங்காளதேசம் ஆகியவை அந்த பிரிவில் உள்ள மற்ற அணிகளாகும். 'பி' பிரிவில் தென்கொரியா, மலேசியா, சீனா, ஓமன், தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய அணிகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் அரைஇறுதிக்கு தகுதி பெறும். உலக தரவரிசையில் 3வது இடத்தில் இருக்கும் இந்திய அணி தனது முதலாவது லீக் ஆட்டத்தில் வருகிற 24ந் தேதி உஸ்பெகிஸ்தானை (காலை 8.45 மணி) சந்திக்கிறது. அடுத்த ஆட்டங்களில் 26ந் தேதி சிங்கப்பூரையும் (காலை 6.30 மணி), 28ந் தேதி ஜப்பானையும் (மாலை 6.15 மணி), 30ந் தேதி பாகிஸ்தானையும் (மாலை 6.15 மணி), அக்டோபர் 2ந் தேதி வங்காளதேசத்தையும் (பகல் 1.15 மணி) எதிர்கொள்கிறது. ஆசிய விளையாட்டில் இந்திய ஹாக்கி அணி 3 முறை தங்கப்பதக்கமும், 9 முறை வெள்ளிப்பதக்கமும், 3 தடவை வெண்கலப்பதக்கமும் வென்றுள்ளது. இதில் கடைசியாக 2018ம் ஆண்டு போட்டியில் வெண்கலப்பதக்கம் பெற்றதும் அடங்கும். ஆசிய விளையாட்டு போட்டிக்கான இந்திய ஹாக்கி அணி வருமாறு: கோல்கீப்பர்கள். ஸ்ரீஜேஷ், கிரிஷன் பஹதுர் பதக், பின்களம்: வருண்குமார், அமித் ரோஹிதாஸ், ஜர்மன்பிரீத் சிங், ஹர்மன்பிரீத் சிங், சஞ்சய், நடுகளம்: நீலகண்ட ஷர்மா, ஹர்திக் சிங், மன்பிரீத் சிங், விவேக் சாகர் பிரசாத், சுமித், ஷாம்ஷெர் சிங், முன்களம்: அபிஷேக், குர்ஜந்த் சிங், மன்தீப் சிங், சுக்ஜீத் சிங், லலித்குமார் உபாத்யாய்.



# வங்காளதேச கிரிக்கெட் வீரர் உள்பட 8 பேர் மீது சூதாட்ட புகார்

அபுதாபி 10 ஓவர் லீக் கிரிக்கெட் போட்டி அமீரகத்தில் நடத்தப்பட்டு வருகிறது. இதில் 2021ம் ஆண்டு நடந்த டி10 லீக்கில் பெரிய அளவில் முறைகேடு நடந்தது அம்பலமாகியுள்ளது. ஆட்டத்தை முன்கூட்டியே நிர்ணயம் செய்ய முயற்சி (மேட்ச்பிக்சிங்), ரகசிய தகவல் பரிமாற்றம், சூதாட்டம் நோக்கில் சந்தேக நபர்கள் அணுகியதை தெரிவிக்காதது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் புனே டெவில்ஸ் அணியின் இணை உரிமையாளர்களான இந்தியாவின் கிரிஷன் குமார் சவுத்ரி, பராக் சங்வி, உள்ளூர் கிரிக்கெட் வீரர்கள் ரிஸ்வான் ஜாவித், சலியா சமன், பேட்டிங் பயிற்சியாளர் அசார் ஜாய்தி, உதவி பயிற்சியாளர் சன்னி தில்லான், அணி மேலாளர் ஷதப் அகமத் மற்றும் வங்காளதேச கிரிக்கெட் அணியின் ஆல்ரவுண்டர் நசிர் ஹூசைன் ஆகியோர் சிக்கியுள்ளனர். கடைசியாக 2021ம் ஆண்டு தொடரில் பங்கேற்ற புனே டெவில்ஸ் அணி 6 ஆட்டங்களில் ஒன்றில் மட்டுமே வெற்றி கண்டிருந்தது. 31 வயதான நசிர் ஹூசைன் வங்காளதேச அணிக்காக 19 டெஸ்ட் மற்றும் 65 ஒருநாள் போட்டிகளில் விளையாடி இருக்கிறார். அவர் சந்தேகத்துக்குரிய நபரிடம் இருந்து பெற்ற விலைஉயர்ந்த பரிசுப்பொருள் விவரத்தை மறைத்து ஊழல் தடுப்பு விதியை மீறியதாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) குற்றம் சுமத்தியுள்ளது. அவர்கள் மீது விசாரணை நடத்தப்பட்டு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# உலக கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டி அறிமுக போட்டியில் வெள்ளி வென்ற இந்திய வீராங்கனை



உலககோப்பைதுப்பாக்கிச்சுடுதல்போட்டி பிரேசில்நாட்டில்உள்ளரியோடிஜெனீரோவில் நடந்தது. இதில் பெண்களுக்கான 50 மீட்டர் ரைபிள் (3 நிலை) போட்டியின் இறுதிச்சுற்றில் இந்திய வீராங்கனை நிஸ்செல் 458 புள்ளிகள் குவித்து வெள்ளிப்பதக்கம் வென்றார். அவர் தனது முதலாவது உலகக் கோப்பை போட்டியிலேயே பதக்கம் வென்று இருப்பதுடன் தகுதிச்சுற்றில் 592 புள்ளிகள் குவித்ததன் மூலம் சக வீராங்கனை அஞ்சும் மோட்ஜிலின் (591 புள்ளி) தேசிய சாதனையையும் தகர்த்தார். நார்வே வீராங்கனை ஜியானெட்டி ஹிக் டஸ்டாட் 461.5 புள்ளிகளுடன் தங்கப்பதக்கம் வென்றார். இந்த உலக கோப்பை போட்டியில் பங்கேற்ற 16 பேர் கொண்ட இந்திய அணி ஒரு தங்கம், ஒரு வெள்ளியுடன் பதக்கப்பட்டியலில் 7வது இடம் பெற்றது. தமிழகத்தைச் சேர்ந்த இளவேனில் வாலறிவன் 10 மீட்டர் ஏர்ரைபிள் பிரிவில் தங்கப்பதக்கத்தை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.